புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 - வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# விளி வழி வெளிப்படும் பண்பாட்டு உணர்வுகள்

**க.சந்தியா**
*பகுதி நேர முனைவர் பட்ட*
*ஆய்வாளர், தமிழ்த்துறை*
*ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி (தன்னாட்சி), சேலம் 636016.*

## முன்னுரை

இலக்கியம் என்பவை மனிதனின் வாழ்வினை நெறிப்படுத்தி பண்பாட்டினை மேம்படுத்தும் கருத்துக்களை கொண்டவைகளாகத் திகழ்கின்றன. எனவே தான் சங்க இலக்கியங்கள் தொடங்கி பதிணென்கீழ்கணக்கு, பக்தி இலக்கியங்கள், இக்கால இலக்கியங்கள் என நம் தமிழ் மொழியில் இடம்பெற்றுள்ள பெரும்பாலான இலக்கியங்கள் தமிழரின் வாழ்வினை மேம்படுத்தும் பண்பாடுகளை நமக்குப் பறை சாற்றுவனவாக அமைத்து எழுதப்பட்டுள்ளன. இதற்கு இலக்கணங்களும் ஓரளவு துணை நிற்கின்றன. இவ்வகையில் தொல்காப்பியர் குறிப்பிடும் எண்வகை வேற்றுமைகளுள் ஒன்றான விளிவேற்றுமை எவ்வாறு இலக்கியங்களில் பயின்று மனித உணர்வுகளை வெளிப்படுத்தி நிற்கின்றது என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## விளித்தல் பயன்பாடு

மனிதன் தோன்றிய காலந்தொட்டே அவனோடு தோன்றியது மொழி. இம்மொழியமைப்பு இடத்திற்கு ஏற்பவும், காலத்திற்கு ஏற்பவும் பல்வேறு மாற்றங்களை அடைந்து இறுதியில் மனிதன் அனைத்தையும் ஆவணப்படுத்த ஆரம்பித்த பிறகு அந்தந்த மொழிக்குழுவினுக்கு ஏற்ப நிலையானதோரு மொழி வடிவினை பெற்ற பல்வேறு மொழிகளை கொண்டதாக மாற்றமடைந்துள்ளது. தமிழ்மொழியும் அவ்வாறே உருவானது எனில் அது ஏற்புடையதே ஆகும். இத்தகு தமிழ்மொழியானது தோன்றிய காலந்தொட்டு இன்று வரை அழியாமல் நிலைபெற்றுள்ளதற்கு தொன்மையான இலக்கண நூலாகிய தொல்காப்பியமே காரணமாக அமைகிறது எனில் அது மிகையாகாது. இத்தகு சிறப்பு வாய்ந்த தொல்காப்பியத்தில் கூறப்பட்ட எட்டு வேற்றமைகளுள் ஒன்றான விளி வேற்றுமை சங்க இலக்கியங்கில் சிறப்பாக கையாளப்பட்டுள்ளது.

விளித்தல் என்றால் அழைத்தல் என்பது பொருள். மனிதன் தான் கூற விளைவதை தனக்கு முன்னோக்கி உள்ளோரிடமோ அல்லது படர்க்கையாரிடத்தோ அல்லது தன்னிடத்தோ கூற முற்படும் போது அங்கு விளித்தல் செயல்பாடானது நிகழ்கின்றது. அவ்வாறு அவன் அழைக்கும் போது எதிரே உள்ளோர் அவன் கூறுகின்ற கருத்தினை நன்கு உற்று நோக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுவதனால் தான் மனிதன் இவ்விளித்தல் செயல்பாட்டை ஓர் உத்தியாக கையாண்டுள்ளான் என்பதை,

**"விளி வேற்றுமை ஒருவன் அல்லது பலரை விளித்து நிற்பது. ஒருவனின் கவனத்தை ஈர்ப்பதற்காகப் பயன்படும் நிலையில் வாசிப்போரின் கவனத்தை இது தன்பால் இழுத்து நிற்கும். தன்பால் இழுக்க முற்படும் போது உரக்கக் கூறவேண்டிய நிலை ஏற்படும். இதனால் தான் இது விளி என்ற பெயரைப் பெற்றது. எனவே , விளி பிற இலக்கணக் கூறுகளிலிருந்து சிறிது உரக்கக் கூறவேண்டிய ஒன்று எனக் கருதலாம்"**[1] என்று ச.அகத்தியலிங்கம் அவர்கள் கூறுவதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

எனவே உள்ளத்து உணர்வுகளை எழுத்தின் வாயிலாக வெளிப்படுத்தும் ஓர் உத்தியாக விளித்தல் செயல்பாட்டை புலவர்கள் கையாண்டுள்ளனர் என்பது இதன் மூலம் அறியப்படுகிறது.

**இல்லற மாண்பு**

**"அன்னாய் வாழிவேண்டு அன்னை நம்படப்பை**
**தேன்மயங்கு பாலினும் இனிய அவர்நாட்டு**
**உவலைக் கூவற் கீழ**
**மானுண் டெஞ்சிய கலிழி நீரே"[2]**

இதில் அன்னாய் என்பது பெண்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் பொதுவான விளிப்பெயராகும். தலைவனுடன் உடன்போக்குச்சென்ற தலைவி மீண்டும் பிறந்தகத்திற்கு வருகிறாள். அவளிடம் தோழி உங்கள் ஊரில் குடிப்பதற்கு கூட தண்ணீர் தட்டுப்பாடு உள்ளதே எனக் கேட்கிறாள். அதற்கு தலைவி நம் பிறந்தகத்தில் கிடைக்கின்ற பாலோடு தேன் கலந்து உண்டால் எத்தகைய சுவை கிடைக்குமோ அதனை விட சிறந்த சுவையினை தன் கணவர் ஊரில் உள்ள மான் உண்டு எஞ்சிய கலங்கல் நீர் தருவதாக பதிலளிக்கிறாள். இதன் மூலம் தலைவி தன் தலைவன் மீது கொண்டுள்ள அன்பும் எத்தகைய வறுமையான சூழலிலும் தனது கணவைரை விட்டுக் கொடுக்காத இல்லற மாண்பையும் எடுத்தியம்புவதாக உள்ளது.

**பக்தியுணர்வு**

சங்க கால மக்கள் இயற்கையையே முழுமுதற் கடவுளாக எண்ணி வணங்கி வாழ்ந்தனர் என்பதற்கு சங்க இலக்கியப் பாடல்களில் அமைந்துள்ள இயற்கை காட்சிகளிலிருந்து அறிந்து கொள்ளாலாம். எனினும் குறிஞ்சி முல்லை மற்றும் பாலை ஆகிய திணை நிலங்களில் இடம்பெறக் கூடிய முருகன், திருமால் மற்றும் கொற்றவை தெய்வங்களை சிற்சிலப் பாடல்களில் அமைத்து புலவர்கள் பாடல் புனைந்துள்ளதும் ஈண்டு நோக்கத் தக்கதாக உள்ளது. தொல்காப்பியரும் தனது நூலில் நால்வகை நிலங்களுக்குரிய தெய்வங்களை வரிசைப்படுத்தியிருப்பதும் தெய்வ பக்தி சங்க கால மக்களிடத்தில் இருந்துள்ளதற்குச் சான்றாக அமைவதை,

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்**
**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**
**சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே"[3]**

என்ற நூற்பாவின் வழி அறிந்து கொள்ளலாம். திருமால், முருகன், இந்திரன் மற்றும் மழைக் கடவுளான வருணன் போன்ற கடவுளர்களுள் விளித்தற்குரிய கடவுளர்களாக இருப்போர் முருகன் மற்றும் திருமால் ஆவர். திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் முருகப் பெருமானை,

**"அற்றவர் பயந்த ஆறமர் செல்வ"[4]**

என்றும்,

**"செருவில் ஒருவ பொருவிறள் மள்ள"[5]**

என்றும் அழைப்பதிலிருந்து அறிந்து கொள்ளலாம்.

மேலும் பரிபாடலில் திருமாலை விளித்து பல்வேறு இடங்களில் கருத்தினை தெரிவிக்கும் முறையினையும்

**"தாளும் தோளும் எருத்தொரு பெரியை**
**மார்பும் அல்குலும் மனத்தொடு பரியை**
**கேள்வியும் அறிவும் அறத்தொடு நுண்ணியை**
**கேள்வியும் மறனும் விருப்பொடு வெய்யை[6]"**

என்ற வரிகளின் வழி அறிந்து கொள்ளலாம். இவ்வாறு தமிழ் மக்கள் தங்களோடு ஒருவராக இறைவனையும் எண்ணி அவனை அழைத்து வாழ்த்தியும் அவனது சிறப்புகளை கூறியும் இருக்கும் திறமானது சங்க கால மக்களின் பக்கி உணர்விற்குச் சிறந்த எடுத்தக்காட்டாகத் திகழ்கின்றது.

**வீர உணர்வு**

*சங்கத் தமிழர் வீரத்தின் விளைநிலமாக விளங்கியதை சங்க இலக்கியப் புற நூல்களான பதிற்றுப்பத்து, புறநானூறு, மதுரைக் காஞ்சி, பட்டினப்பாலை போன்ற நூல்கள் நமக்கு எடுத்தியம்புகின்றன. வீரமே ஒரு மனிதனுக்கு புகழ் மாலையையும் வெற்றிச் சிறப்பையும் வழங்கும் என்பதை உணர்ந்தே போர்த் தொழிலினை சிறந்த மறமாகக் கருதி அதனை விரும்பி செய்தனர்.*

***"முழங்கு முந்நீர் முழுவதும் வளைஇப்***
***பரந்துபட்ட வியன் ஞாலம்***
***தாளின் தந்து தம்புகழ் நிறீஇ***
***ஒருதாம் ஆகிய உரவோர் உம்பல்"***[7]

*என்ற புறநானூற்று வரிகளின் வழி அறிந்து கொள்ளலாம்.*

*இதில் இவ்வுலகினை தனது அரிய முயற்சியால் வெற்றிக் கொண்டு புகழ் பெற்றுத் தாமே ஒருகுடைக் கீழ் அரசாண்ட வலிமை உடைய மறவர் வழியில் வந்தவனே என பாண்டியன் நெடுஞ்செழியனை குடபுலவியனார் பாடுவதிலிருந்து வீரத்திற்கு அவர்கள் அளித்தள்ள முக்கியத்துவத்தினை அறிந்து கொள்ளலாம்.*

**முடிவுரை**

*பண்பாடு என்பது நம் முன்னோர்களின் பழக்க வழங்களையும் காலாச்சாரத்தையும் தொன்று தொட்டு கடைபிடித்து வரும் ஒரு நிகழ்வாகும். இந்த பண்பாட்டினை காலத்திற்கேற்பவும் நம்முடைய நடைமுறை வாழ்விற்கு ஏற்பவும் சிற்சில மாற்றங்களை செய்யும் போது அது நாகரிகமாக பரிணமிக்கின்றது. அவ்வகையில் பிறரை அழைப்பதற்கு விளியினை பயன்படுத்தி தனது கருத்துக்களை அவர்கள் கேட்கும் படி செய்யும் உத்தி நிலையை சங்க காலம் தொட்டு இக்காலம் வரை இருந்து வருவதை நம்மால் காணமுடிகின்றது. இவ்வாறு பயன்படுத்தப்படும் விளிப்பெயர்கள் மனிதனின் பண்பாட்டினையும் நாகரிகத்தினையும் வெளிப்படுத்தும் காலக் கண்ணாடியாகத் திகழ்வதையும் இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.*

**மேற்கோள் பட்டியல்**


1. *ச.அகத்தியலிங்கம், கவிதை உருவாக்கம் ப.15*
2. *புலியூர்க் கேசிகன் (உ.ஆ), ஐங்குறுநூறு – குறிஞ்சி பா.எ.3*
3. *இளம்பூரணார் (உ.ஆ), தொல்காப்பியம், பொருளதிகாரம், நூற்.எ 5*
4. *நச்சினார்க்கினியர் (உ.ஆ), பத்துப்பாட்டு, திருமுருகாற்றப்படை, பா.எ.255*
5. *நச்சினார்க்கினியர் (உ.ஆ), பத்துப்பாட்டு, திருமுருகாற்றப்படை, பா.எ.262*
6. *புலியூர்க்கேசிகன் (உ.ஆ), பரிபாடல், பா.எ.13*
7. *புலியூர்க்கேசிகன் (உ.ஆ), புறநானூறு, பா.எ.18*


********* ********* ********** ********* ********* ********** ********** **********